06.12.2023

**வா.சா. 1**

**திரு ராஜேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) 12.05.2016 தேதியிட்ட நவநீதம் பெயரில் உள்ள சிட்டா இணையதள நகல் **வா.சா.ஆ.1.**

2) 20.09.1987 தேதியிட்ட என் பாட்டி கண்ணம்மாள், என் அம்மா நவநீதம் ஆகியோர் எனக்கும் என் தம்பி வீரசிங்கத்திற்கும் எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**. (உயில் ஆவணத்தின் அசல் நான், என் அம்மா, என் தம்பி ஆகிய மூவரும் மன்னார்குடி இந்தியன் வங்கி மெயின் கிளையில் கடன் வாங்கும் போது ஆவணத்தை வங்கியில் கொடுத்துள்ளோம். கடன் பெற்றது சம்மந்தமாக வழக்கு நடந்து எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது. அசல் உயில் ஆவணம் மன்னார்குடி இந்தியன் வங்கி மெயின் கிளையில் உள்ளது).

3) சொத்தின் வழிகாட்டி மதிப்பு பட்டியல் இணையதள நகல் **வா.சா.ஆ.3**.

4) 20.01.2016 அன்று என் தாயார் திருமதி நவநீதம் சிவானந்தம் இறந்ததற்கான இறப்பு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.4**.

5) 01.03.2016 அன்று என் தகப்பனார் சிவானந்தம் இறந்ததற்கான இறப்பு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.5**.

6) 25.01.1988 அன்று என் பாட்டி கண்ணம்மாள் இறந்ததற்கான இறப்பு சான்று சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6**.

7) 25.03.2019 தேதியிட்ட புல எண் 295/1 மற்றும் 299/5 க்குரிய சீனிவாச செருமடார் அவரிகளிடமிருந்து ரகுநாத தேவர் கிரயம் பெற்ற கிரய ஆவணம் சான்றிட்ட நகல் மற்றும் அதனுடைய வாசகங்கள் டைப் செய்யப்பட்டு Notarised செய்யப்பட்ட ஆவணம் **வா.சா.ஆ.7**.

8) 19.06.1961 தேதியிட்ட என் பாட்டி கண்ணம்மாள் கிரயம் பெற்ற சொத்தின் கிரய சாசனம் A ஷெட்டியூல் சொத்து சான்றிட்ட நகல் மற்றும் அதனுடைய வாசகங்கள் டைப் செய்யப்பட்டு Notarised செய்யப்பட்ட ஆவணம் **வா.சா.ஆ.8**.

9) 11.06.1952 என்னுடைய தாத்தா ரகுநாத தேவர், அப்பாசாமி பிள்ளை, சீதாலெட்சுமி ஆகியோர் கிரயம் பெற்ற சொத்தின் கிரய சாசனம் சான்றிட்ட நகல் மற்றும் அதனுடைய வாசகங்கள் டைப் செய்யப்பட்டு Notarised செய்யப்பட்ட ஆவணம் **வா.சா.ஆ.9**

10) 06.05.1953 தேதியிட்ட என் தாத்தா ரகுநாத தேவர், ராமசாமி கண்டியரிடம் கிரயம் பெற்றதற்கான சொத்தின் கிரய சாசனம் சான்றிட்ட நகல் மற்றும் அதனுடைய வாசகங்கள் டைப் செய்யப்பட்டு

Notarised செய்யப்பட்ட ஆவணம் **வா.சா.ஆ 10**.

11) 07.05.2009 தேதியிட்ட உயிலின் A ஷெட்டியூல் சொத்துக்களை என் அம்மா விற்பனை செய்ததற்கான கிரய ஆவணத்தின் இணைய தள நகல் **வா.சா.ஆ.11**.

12) 12.03.2023 தேதியிட்ட தாவா சொத்தின் புல எண் 66/2D சொத்துக்கான சிட்டா இணையதள நகல் **வா.சா.ஆ.12**.

தாவாபடி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI Digitally signed by M SHANTHI DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN Date: 2023.12.06 18:17:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.